## இயல் 7.3 - இயற்கணிதம்

பயிற்சி எண் :: 7.3.5.2.A

இயற்கணிதம் - அசமன்பாடுகள் வரையறை

Algebra - Inequalities - Definition

## இயற்கணிதம் (Algebra) - அசமன்பாடுகள் வரையறை

சமமற்ற இரு மதிப்புகளை கீழ்காணும் அசமன்பாட்டுக் குறியீடுகளைப் பயன்படுத்தி இணைக்கும் கூற்றையே **அசமன்பாடு** என்கிறோம்.

பொதுவாக எல்லா நேரங்களிலும், எல்லா மதிப்புகளும் சமமாக இருப்பதில்லை. அவை சமமாக இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. ஒரு மதிப்பு மற்றொன்றை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம். அவற்றை அசமன்பாட்டுக் குறியீடுகளின், மூலம் இணைக்க இயலும்.

### அசமன்பாட்டுக் குறியீடுகள்

$<$ - சிறியது

$\leq$ - சமம் அல்லது சிறியது

$>$ - பெரியது

$\geq$ - சமம் அல்லது பெரியது

$\neq$ - சமமல்ல

இயற்கணிதச் சமன்பாடு மற்றும் அசமன்பாடு ஆகியவற்றின் புரிதலைக் கொண்டு, கீழே சில உதாரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. கரிகாலனும், குமாரும் ஒரே வயதுடையவர்கள். குமாரின் வயது 13 எனில் கரிகாலனின் வயது என்ன?

கரிகாலனின் வயது $\overset{\text{சமம்}}{=}$ குமாரின் வயது

குமாரின் வயது $= 13$

$\therefore$ கரிகாலனின் வயது 13 ஆகும்.

2. ஒரு செவ்வகத்தின் நீளம் 5 செ.மீ - க்கு அதிகமாக இருக்கிறது அதனை அசமன்பாடாக எழுதுக.

$\therefore$ செவ்வகத்தின் நீளம் $(l)$ $>$ 5 செ.மீ

3. எழிலரசியிடம் பத்து அல்லது அதற்குக் குறைந்த பழங்களே உள்ளன. அதனை அசமன்பாடாக மாற்றுக.

எழிலரசியிடம் உள்ள பழங்களின் எண்ணிக்கை $= x$ எனக் கொள்க

$\therefore x \leq 10$

4. குமரனின் உயரம் 4 அடியை விடக் குறைவு. இதனை அசமன்பாடாக மாற்றுக.

குமரனின் உயரத்தை $x$ எனக் கொள்க.

$x < 4$

5. சேகர் முழு ஆண்டுத் தேர்வில் 70 மதிப்பெண் அல்லது அதற்கு அதிகமான பெற்றிருந்தான். இதனை அசமன்பாடாக மாற்றுக.

சேகர் பெற்ற மதிப்பெண்ணை $x$ எனக் கொள்க.

$x \geq 70$

6. வாணி மற்றும் விமலா ஆகியோரின் எடை சமமல்ல. இதனை அசமன்பாடாக எழுதுக.

வாணியின் எடை $= x$ எனக் கொள்க

விமலாவின் எடை $= y$ எனக் கொள்க

$x \neq y$

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/ctWvFQpup8k


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Friday 7th October, 2022 :: 10:17 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.